1980 ஜூலை 26]

நாசரேத் பேரூராட்சிப் பகுதிக்கு குடிதண்ணீர் வழங்கும் திட்டம்.

*(வினா எண் 61. திரு. எஸ். என். இராமசாமி: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சாத்தான்குளம் தொகுதி நாசரேத் பேரூராட்சிக்கு தாமிரபரணி நதியிலிருந்து குடிதண்ணீர் கொண்டுவரும் திட்ட வேலை நடைபெறாமல் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் வேலை தொடர அரசு எடுத்துள்ள நட வடிக்கை என்ன?

மாண்புமிகு திரு எஸ். இராகவானந்தம்:

(அ) & (ஆ): நாசரேத் குடிநீர் திட்டத்திற்கு அரசு நிர்வாக ஒப்புதல் அளித்து ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டுள்ளன ஒப்பந்தப்புள்ளிகள் முடிவு செய்யப்பட்டதும் வேலைகள் விரைவில் தொடங்கும்.

திரு. எஸ். என். இராமசாமி: சாத்தான்குளம் தொகுதி நாசரேத் பேரூராட்சிக்கு தாம்பிரபரணி நதியிலிருந்து குடி தண்ணீர் கொண்டு வரும் திட்ட வேலையை உடனே துவங்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: இத்திட்ட வேலைக்கான பெரும்பாலான தளவாடப் பொருள்கள் பெறப் பட்டுள்ளன. ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டுள்ளன. விரைவில் ஒப்பந்தப்புள்ளிகள் முடிவு செய்யப்பட்டு வேலை துவங்கப்படும். இவ்வேலை 1981ஆம் ஆண்டுக்குள் முடிவடையும் என்று எதிர் பார்க்கப்படுகிறது.

திரு. கே. குப்புசாமி: கிராமப்புறங்களில் குடி தண்ணீர்த் திட்டத்திற்காக ஆங்காங்கே பூமியில் குழாய்கள் போடப்படு கின்றன. அவை ரிப்பேர் ஆகிவிட்டால் ரிப்பேர் செய்வதற்கு மெகானிக்குகள் பிட்டர்கள் இல்லாத நிலை இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்வி சாத்தான் குளத்தைப் பற்றியது.